முருகப்பெருமான் துணை

**மகான் வால்மீகி அருளிய யோக பிரசன்ன ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

**01.04.2021**, வியாழக்கிழமை

1. முருகப்பெருமான் அருள்வடிவே
முழுமை ஞானம் பெற்ற குருவே
பெருமை மிக்க ஞானயுகம் படைக்க
பிரம்ம சக்தியாக வந்த குருவே
2. குருவே அரங்கனே குருராசனே
குறைவிலா உன் பெருமை கூறி
வருமுலகில் உலகநலம் காண
வழங்குவேன் யோகபிரசன்ன ஆசி
3. ஆசியை சார்வரி சேல் திங்கள்
அறிவிப்பேன் மூவாறோர் திகதி குருவாரம்
(சார்வரி வருடம் பங்குனி மாதம் 19ம் நாள், 01.04.2021 வியாழக்கிழமை)
பேசிட வால்மீகி யானும்
புகலுவேன் அரங்கஞானி அவதாரம் சிறக்க
4. சிறக்கவே கலியுக மாற்றம்
செய்தே தீருவேன் என
அறத்தை உயர் கொள்கையாக
அகிலத்தில் உருவாக்கி சேவை
5. சேவையை தயவாக நடத்தும்
சிவராஜ யோகி அரங்கனை
அவனி ஏற்றுத் தொடர
அன்பர்கள் சீடர்களாகி வர
6. வருவதுடன் உயர் சேவையை
வழிமொழிந்து உலகமெங்கும்
குருவே என போற்றி செயல்பட
குவலயம் கலியின் பிடியிலிருந்து விலகி
7. விலகி அமைதி பாதுகாப்பும்
வினைபற்றா நிலை காணும்
கலகம் துன்பம் இல்லாத
கண்ணியமான நிலை கூடும்
8. கூடவே மக்களின் சக்தி
குறைவிலா தரும ஞான
சுடர்மிக்க சக்தியாக மாறி
சுத்த நெறி உள்ள மக்களாகி
9. ஆகியே பேரண்டம் தன்னில்
அரங்கன் தத்துவம் நிரம்பி
மகிழவே மக்களிடை இனி
மனபலம் எளிய வகை செயல்பாடு

10. செய்லபாட்டில் தெளிவுதிடம்
சித்திகளும் வந்தடையும்
தயவான தலைமைகள் கூடி
தரணியே பாதுகாப்பு கூடும்

11. கூடுமே அரங்கன் ஞான ஆட்சி
குறைவிலா தரும ஆட்சி
நாடெங்கும் இனிதே அரங்கேறும்
நாட்டிய யோக பிரசன்ன ஆசி முற்றே

—சுபம்—